அரசாங்க நிருவாக சுற்றறிக்கை : 08/2005 (X)

எனது இலக்கம் : EST-7/LOANS/04/4210
பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07
2013 சனவரி மாதம் 31 ஆம் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

## தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் II ஆம் பிரிவைத் திருத்துதல் - ஆதனக் கடன்

வங்கி மூலம் ஆதனக் கடன்களை வழங்குவதற்குரியதாக புதிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் II ஆம் பிரிவைத் திருத்தி வெளியிடப்பட்ட 2005-08-23 ஆம் திகதியிடப்பட்டதும் 08/2005(III) ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான சுற்றறிக்கைக்கு பின்வரும் பிரிவானது 11:1:9 ஆம் பிரிவாக சேர்க்கப்பட்டு இத்தால் திருத்தப்படுகின்றது.

**11:1 கடன் வழங்கப்படக்கூடிய நோக்கங்கள்**

11:1:9 அரசாங்கத்தினால் அல்லது தனியார் துறையினரால் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புக் கருத்திட்டமொன்றிலிருந்து வீட்டு அலகொன்றை அல்லது தொடர் மாடி வீட்டு கருத்திட்டமொன்றிலிருந்து வீட்டு அலகொன்றை கொள்வனவு செய்தல்.

02. இந்த சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம் / பீ.வீ. அபேகோன்
செயலாளர்,
பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.